T-UN-662

தமிழ்ப் பல்கலைக் கழகச்

செய்தி மலர்

மலர் - 2 திருவள்ளுவராண்டு 2015 பங்குனி 1 இதழ் - 12
14 - 3 - 1984

இலண்டன் பேராசிரியர் சான்மார் துணை வேந்தரைக் காணல்.

இலண்டன் கீழ்த்திசை ஆப்பிரிக்க ஆய்வு நிறுவனத்தில் கடந்த முப்பது ஆண்டுகளாகத் தமிழ், கர்நாடக இசை, இப்போது கலை, சிற்பம் முதலியவற்றைப் பயிற்றி வரும் டாக்டர் சான்மார், பேரா. நம்பியாரூரனுடன் துணைவேந்தரவர்களை 16-1-'84 அன்று மாலை நான்கு மணியில் சந்தித்தார். பின்னர் அறிவியல் களஞ்சியத் தலைமைப் பதிப்பாசிரியர் திரு பி. எல். சாமியும் கலந்துகொண்டார்.

துணைவேந்தர்: தாங்களும் எடின்பரோவில் டாக்டர் ஆசரும் தமிழ்மொழிப் படிப்பிற்குச் செய்துவரும் தொண்டைப் பாராட்டுகிறேன். உங்கள் காலத்திற்குப் பின் இப் பணியைத் தொடருதற்கு இளைஞர்களைத் தயார்செய்து விட்டீர்களா?

சான்மார்: இப்போதெல்லாம் தமிழ் மொழிப் படிப்பிற்கு மாணவர்கள் அதிகமாக, பிரிட்டனில் வருவதில்லை. போன ஆண்டு நடந்த இந்திய விழாவின் பின்னர் கலை, சிற்பம் முதலியவற்றைப் பயில மாணவர்கள் பலர் வகுப்பிற் சேருகின்றனர். மாணவர்களைப் பொறுத்துத்தான் எங்கள் வகுப்பு-களும் ஆசிரிய நியமனமும் நடைபெறும். எங்கள் காலத்திற்குப் பின்னர் அரசு உதவி குறைவதால்ஒரு வேளை இந்தத் துறைகளை மூடவும் நெறிப்படுத்து-வோர் முயலலாம்.

து.வே.: சமதர்ம நாடுகளில் பல, தமிழ்முதலிய கொள்கை மொழிகளை விரும்பிக் கற்கும் போது வரலாற்றுத் தொடர்புடைய பிரிட்டனில் ஏன் தமிழ் மொழிப் படிப்பு காலூன்றவில்லை? மலாய், சிங்கப்பூர், இலங்கை, பர்மா, பிசி (Fiji) முதலிய நாடுகளில் தமிழ் பரவியிருத்தலால் தமிழ்ப் படிப்பு பிரிட்டனில் தொடர்ந்து வரலாற்றுக் காரணங்களுக்காகச் செல்வாக்குப்பெற வேண்டும் அல்லவா?

மார்.: அது உண்மை. ஆனால் மாணவர்கள் நம்பி வகுப்பு ஏற்பாடாகும்போது அவர்கள் வராவிட்டால் துறைகளை நிறுத்துவது பிரிட்டனில் வழக்கம். இந்தியத் தத்துவத்திற்கும் கலைக்கும் இப்போது நல்ல வரவேற்பிருப்பதால் மறை-முகமாகத் தமிழ்ப்படிப்பு நடைபெறுகிறது. எனவே, இந்நிலை தொடரும் என்று கூறமுடியும். முன்னர் மொழிப்படிப்பை மொழியியலாளர்கள் விரும்பிமேற் கொண்டனர். இப்போது அவர்களுடைய எண்ணம் குறைந்து வருகிறது. சப்பான் நாட்டிலிருந்து ஒருவர் இலண்டனில் தமிழ்ப் படிக்கிறார். ஆனால் சப்பான் மொழிக்கும் தமிழுக்குள்ள தொடர்பில் அவருக்கு அக்கரை இல்லை. சமதர்ம நாடுகள் தமிழ்ப் படித்துத்தமிழர்களின் பாராட்டைப் பெறும் செய்தியை முதலமைச்சர் திருமதி மார்கரெட் தாச்சருக்குத் துணைவேந்தர் அவர்கள் நேரிற் சொன்னால் ஒருவேளை கூடுதல் நிதி ஒதுக்கீடு எங்கள் நிறுவனத்திற்குக் கிடைக்க வாய்ப்புண்டு.

து.வே.: வேறு என்ன வழிகளில் தமிழ்ப் படிப்பைப் பிரிட்டனில் ஊக்குவிக்க இயலும்? பொது மக்கள் நிறுவும் மன்றங்கள் ஏதாவது இதற்கு உதவ இயலுமா?

மார்: பாரதீய வித்யா பவன் இலண்டனில் கிளை ஒன்றை அமைத்து நல்ல தொண்டு செய்துவருகிறது; இந்திய நாட்டுக் கலைகள் அனைத்திற்கும் ஊக்கம் தருகிறது. அமெரிக்காவிலும் செர்மனியிலும் அதற்கு கிளைகள் இருக்கின்றன. அரசியல் சார்பல்லாததால் சார்லசு இளவரசர் அதன் பாதுகாவலராக இருக்கிறார். முதலமைச்சர் திருமதி தாச்சர் இலண்டன் கிளையின் தலைவர். இலண்டன் தமிழ்ச்சங்கங்கள், அரசியல் கட்சிச் சார்புடன் இயங்குவதால் ஆங்கி-லேயர் ஒதுங்கி நிற்கவே விரும்புகின்றனர்.

(பாரதீய வித்யா பவனம் போன்ற மக்களால் தோற்றுவிக்கப்படும் ஒரு நிறுவனம் இலங்கை,

சிங்கப்பூர், மலேயா, பிசி, மொரிசியசு, தென் ஆப்பிரிக்கா முதலிய நாடுகளில் தமிழுக்கென அமைந்தால் நன்றாக இருக்கும் என்ற கருத்தைத் துணைவேந்தர் அவர்கள் கூறிய பின்னர் உரையாடல் தொடர்ந்தது).

து.வே.: தங்களுடைய பதிற்றுப்பத்து ஆய்வு (இதை அவர் தமது டாக்டர் பட்டத்திற்குப் படைத்தார்) வெளியாகிவிட்டதா? (இதில் முதல் பத்து, பத்தாம் பத்து ஆகியவற்றில் உட்பட்டிருக்கலாம் என்று கருதும் சில பாடல்களை உரையாசிரியரின் எடுத்துக்காட்டுகளிலிருந்து சான்று காட்டி, சான்மார் தமது ஆய்வு அறிக்கையை உருவாக்கி இருக்கிறார்).

மார்.: இல்லையே! வெளியீடுகளுக்கு இப்போது பிரிட்டனில் அதிகச் செலவாகும். தமிழ் கற்பிப்பதற்கு உருவான இரு பாடத்தொகுதிகளை அச்சேற்றுவதற்கு முயன்று வருகின்றோம். நிழற்படம் எடுத்து இங்கே அனுப்பினால் வெளியிட முயல்வீர்களா?

து.வே.: அங்கே வெளியாகும் தமிழ் ஆய்வு பற்றிய நூல்கள், கட்டுரைகளின் படிகள் இங்கே அனுப்ப இயலுமா? இலண்டனிலுள்ள இந்திய அலுவலகத்திலிருக்கும் ஏடு, அரிய நூல் விவரங்களைத் தெரிவிக்க இயலுமா? நுண்படம் எடுக்க ஏற்பாடு செய்ய இயலுமா?

மார்.: இவை இயலும். (இவற்றை மார் தமது நாள்காட்டியில் குறித்துக் கொண்டார்).

து.வே.: ஆலந்து நாட்டில் நிதிக்குறைவால் உற்றரேக்டிலுள்ள கமீல் சுவலபில் தலைமையேற்று நடத்தும் இந்திய இயல்துறை நீக்கப்பட உள்ளதை நினைவுகூர்ந்து இதைப் போன்ற நிகழ்ச்சிகள் நடவாமல் வருமுன் காப்பது தேவையல்லவா?

மார்: தேவைதான். ஒவ்வொரு துறையைப் பராமரித்தற்கும் பொருள் தேவையாகையால் சிக்கனம் கருதி சிறுமொழிப் படிப்பை விலக்குகின்றனர். மற்றொன்றையும் தாங்கள் தெரிவது நல்லது. முன்னர் தமிழ்மொழி, பண்பாடு முதலியவற்றில் நாங்கள் செய்த ஆய்வுகள்தான் வெளியாயின. உள்நாட்டு ஆய்வு வெளியாகவில்லை. இப்போது அவை பெருமளவில் தரமாக வெளிவருகின்றன. நாங்கள் செய்த வேலையின் பெரும் பகுதியை நீங்கள் செய்வதால், உங்கள் வெளியீடுகளைப் பயன்படுத்தி நாங்கள் செலவைச் சுருக்க விரும்புகிறோம். இது இயல்புதானே?

து.வே.: நேரம் குறைவாகையால் உங்களுக்கு எங்கள் பாராட்டுதலைத்தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் மொழி, கலை முதலியவற்றைப் பயிலும் மாணவர்களுக்குத் தமிழகத்தில் தங்கிப் படித்தற்கு உதவி வேண்டுமாயின் தெரிவிக்க!

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் மொரிசசுத் தமிழர்

தமிழ்ப் பல்கலைக் கழகம் நடத்திய 'தமிழ்ப் பண்பாடு ஓர் அறிமுகம்' என்னும் வகுப்புக்கு வந்திருந்த மொரிசசு நாட்டு மகாத்மா காந்தி நிறுவனத்தின் பாடத்திட்ட மேம்பாட்டு அலுவலர் திரு பி. திருமலைச்செட்டியுடன் நடத்திய நேர்காணல் நிகழ்ச்சியில் திரட்டிய செய்திகள் வருமாறு:

கிரியோல் மொழி:

நீண்ட நெடு நாள்களாகத் தமிழர்கள் மொரிசசு நாட்டில் குடியேறி வாழ்ந்துவருகின்றனர். சில குடும்பங்களின் பல தலைமுறைகள் அங்கேயே பிறந்து வளர்ந்துவிட்டன. இன்றைய இளந்தலைமுறையினர் தமிழைப் பேசவில்லை. மொரிசசு நாட்டில் கிரியோல் என்னும் மொழி பேசப்படுகிறது. அதற்கு எழுத்துரு கிடையாது. இப்போது அம்மொழி உரோமன் எழுத்துருவில் எழுதப்படுகிறது.

தமிழ்ப்பயிற்சிக்கான முயற்சிகள்:

இளந்தலைமுறையினர் வழக்கில் தமிழ் மொழி இல்லாவிடினும் தமிழ் மொழியைக் கற்பிக்கப் பல முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. தமிழை ஓர் அயல் மொழியாகக் கற்கும் முயற்சி தமிழர்களிடையே இப்போது ஊக்கமாக உள்ளது. மொரிசசு நாட்டில் உள்ள பள்ளிகள் அனைத்தும் அரசினரால் நடத்தப்பெறுகின்றன. அரசுதான் அப் பள்ளிகளுக்கு ஆசிரியர்களைப் பணியமர்த்துவதையும் ஊதியம் வழங்குவதையும் செய்கிறது. தமிழ் மாணவர்கள் உள்ள இடங்களில் தொடக்கப்பள்ளிகளில் தமிழ் மொழி பயிற்றுவிக்கப்படுகிறது. உயர்நிலைப்பள்ளியளவில் மகாத்மா காந்தி நிறுவனம், எலிசபெத் அரசி கல்லூரி ஆகிய இரண்டு நிறுவனங்களில் தமிழ் பயிற்றுவிக்கப்படுகிறது. பல தனியார் நிறுவனங்கள் முதல் படிவம் முதல் ஐந்தாம் படிவம் வரை தமிழ் வகுப்புகளை நடத்துகின்றன.

'தமிழ் மணி': உயர்நிலைப்பள்ளி நிலை வரை தமிழ் பயின்றவர்கள் அதற்குமேல் சென்னைமாணவர் மன்றம் நடத்தும் தேர்வு எழுதி 'தமிழ் மணி' என்னும் பட்டம் பெறலாம். இதற்குச் சங்க இலக்கியம் முதல் பாரதிதாசன் கவிதைகள் வரை

உள்ள நூல்கள் பாடமாக உள்ளன.

முதல் தமிழ்ப் பட்டதாரி: மொரிசசு நாட்டில், பிறந்து வளர்ந்தவர்களில் முதன் முதலில் தமிழ் மொழியில் பட்டம் பெற்றவர் திரு பி. திருமலைச் செட்டி. இப்போது தமிழ்ப் பட்டதாரிகள் நாடு முழுவதிலுமாக ஐந்து பேர் இருப்பதாகக் கூறினார். முதலில் ஆங்கிலமும், பிரஞ்சு மொழியும் பயிற்றும் ஆசிரியராக இருந்த திரு திருமலைச்செட்டி பிறகு தமிழில் இலண்டன் தமிழ்க்கல்விச்சான்றிதழ் தேர்வில் வெற்றி பெற்றார். அதன் பிறகு தமிழில் அதிக ஈடுபாடு கொண்டு பல கவிதைகளையும், நாடகங்களையும் எழுதியுள்ளார். 'கொந்தளிக்கும்கடலிலே' 'அச்சமில்லை', 'அவனும் மனிதன்' போன்ற அவருடைய நாடகங்கள் மேடையேறியுள்ளன.

அச்சகம் இல்லை: மொரிசசு நாட்டில் தமிழ் நூல்களை அச்சிட அச்சகம் இல்லை. தமிழ் நாட்டில்தான் நூல்களை அச்சிட வேண்டும்.

மொரிசசு நாட்டில் தமிழ்ப் பண்பாடும், சமய நிலையும்: மொரிசசு நாட்டில் பெரும்பாலும், முருகன் கோயில்களும் மாரியம்மன் கோயில்களுமே உள்ளன. அங்குள்ள கோவில்கள் தமிழ்ப் பண்பாட்டு மையங்களாக விளங்குகின்றன. காவடி எடுத்தல், அலகு போட்டுக்கொள்ளுதல் ஆகியவற்றுடன் தீமிதியலும் நடைபெறுகின்றன. காவடி எடுப்போர் பட்டினியிருந்து பக்தியுடன் அதனை எடுத்துச் செல்கின்றனர் என திரு பி. திருமலைச்செட்டி குறிப்பிட்டார்.

-செ.ரெ.செயச்சந்திரன்

தக்க கலைச் சொல் தாரீர்

கலைச்சொல்	இப்போதுள்ள பெயர்ப்பு
Slide projector	வில்லை விளக்கி
Overhead projector	நகல் விளக்கி
16 mm projector	16 எம்.எம். நிழற்பட விளக்கி
Language Laboratory	மொழிக்கூடம்
Video Cassette Recorder	காட்சிப்பதிவுக்கருவி
Frequency	வருகைப் பெருக்கம்

-கலைச்சொல் வங்கி, மொழிபெயர்ப்புத் துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம்

கணிப்பொறிப்பயிற்சி வகுப்புத் தொடக்க விழா.

"உலகில் பெரும் அதிர்ச்சியை உண்டாக்கியது கணிப்பொறி. இன்று நாம் சந்திர மண்டலத்திலே ஆய்வு செய்கிறோமென்றால் அதற்குத் துணை செய்தது கணிப்பொறி. மனித நினைவு மாறுகிறது. சில நேரங்களில் தளர்ச்சியும் அடைகிறது. கணிப்பொறி எப்போதும் எதைக்கேட்டாலும் தருகிறது. பின் தங்கிய நாடுகளிலே முன்னணியில் நிற்கின்ற இந்தியாவில் நாம் கணிப்பொறியைப் பயன்படுத்தும் முறையை அறிய வேண்டும்".

-டாக்டர் வ.அய். சுப்பிரமணியம், துணைவேந்தர்
-தலைமையுரையில்



"முதல் நிலையில் வால்வுகளை வைத்துக்கணிப்பொறி செய்தார்கள். பிறகு ஒருங்கிணைப்பு முறையில் செய்தார்கள். சுற்றுக்களிலேயே நிறைய சக்தி வீணாகியது. இப்போது சப்பான்நாட்டில் ஐந்தாம் நிலைக் கணிப்பொறிகள் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இப்போது நுண் அமைப்பைக் கைக்கொண்டு பல கணிப் பொறிகள் வந்து விட்டன. வீட்டிலுள்ளோர் செய்யும் வேலைகளைச் செய்யக் கூடிய வீட்டுக்கணிப்பொறிகள் இப்போது உற்பத்தியாகின்றன. பொறியியல் துறையில் ஆசிரியர்களின் பற்றாக்குறையைப் போக்கக் கணிப் பொறியைப் பயன்படுத்தலாம். வினா கொடுத்தால் விடை அளிப்பது ஒரு வகைக் கணிப்பொறி. ஆனால்,ஒரே சமயத்தில் பல வினாக்களைக் கொடுத்தால் எல்லோருக்கும் விடை கொடுக்கும்".

-டாக்டர் பி.ஏ. வேங்கடாசலம், மின்னணுவியல் துறைப் பேராசிரியர், அண்ணா பல்கலைக்கழகம்
-தொடக்க உரையில்

கணிப்பு மையம் நடத்திய நான்கு வாரச்சான்றிதழ் பயிற்சி வகுப்புத் தொடக்க விழா 7-2-84 காலை 10 மணியளவில் நடைபெற்றது. திரு கா. செ. செல்லமுத்து, இணைப்பேராசிரியர், கணிப்பு மையம் வரவேற்புரையும் நன்றியுரையும் வழங்கினார்.

தமிழ்ப் பல்கலைக் கழகச்

செய்தி மலர்

திங்களிதழ்

பதிவெண் 15033/82X1

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 613 001.
தமிழ்நாடு - இந்தியா.

இ.அ.அ. மட்டும்.

திருமதி புலவர் திலகம்
3/1709, பிச்சாண்டி முதலி சந்து
மாளோசியப்பா வீதி
தஞ்சாவூர்

பிறர் தரவு

'ஒரு சொல் தாரீர் (14-12-83 செய்தி மலர்) பகுதிக்கு வந்த கலைச் சொற்கள்:

Jock : தாக்குமுட்டு, செருகு முனை, தொங்குப்பு முனை, செருகு இணைப்பு

J[illegible] : உழக்கி

Noctovisior : அகச்செங்காட்சி, அகச் செவ்வொளிக்காட்சி, உட் சிவப்பொளிக்காட்சி

Accelerating electrode : மின்னணு உந்து தண்டு, முடுக்கும் மின்முனை

Centre tap : நடுப்பொருத்துவாய், மையக் கொள்ளி, நடுக்கால் மைய வடிமுனை, மையப்பிரிவுமுனை, இடை மடிப்புமுனை, இரட்டைப் பிரிப்பு முனை

சொல்லாக்கித் தந்த பேராசிரியர் திரு பாண்டிய-ராசா (மதுரை), திரு சௌந்தர பாண்டியன் ஆகியோருக்கு நன்றி.

-கலைச்சொல் வங்கி, மொழிபெயர்ப்புத்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்

<u>அன்பளிப்பு - சுவடி - நன்றி</u>

கோயம்புத்தூர் ஸ்ரீஅவிநாசிலிங்கம் மனையியற் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் திருமதி டாக்டர் சிவகாம சுந்தரி அவர்கள் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு ஓர் உரைநடை இராமாயணச்சுவடியை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

அருங்காட்சியகம்.

பழம்புதைபொருள்கள், கற்கள், நாணயங்கள், பல்வகைக் கருவிகள் ஆகியவை அருங்காட்சியகத்தில் மார்ச்சுத் திங்களில் 1319 உள்ளன.

புதிய சேர்க்கையில் சோழர் உண்டியல்கள், மருந்துக் கல்வம், பல்வேறு வீட்டுப் பொருள்களும் உழவுத் தொழிலுக்குப் பயன்படுத்துகின்ற கொழு மண் வெட்டிகள், அரிவாள், களைக்கொத்து, மரக்கால், படி, முறம், வாய்க்கூடு போன்றவைகளும் அருங்காட்சியகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

பழைய அச்சான நூல்களில் பரவர் புராணம், வைசிய புராணம், கணக்கதிகாரம், வைத்திய மூலிகை அகராதி, இரகுநாத சேதுபதி ஒருதுறைக் கோவை ஆகியன குறிப்பிடத்தக்கன.

செய்தி இதழ் உரிமையர் மற்றும் விவரங்கள் அறிவிப்பு

வெளியீட்டிடம்	: தஞ்சாவூர்
வெளியீட்டுக் காலமுறை	: திங்களிதழ்
அச்சாளர் பெயர்	: இயக்குநர், பதிப்புத்துறை
இந்தியக் குடிமகனா?	: ஆம்
முகவரி	: தமிழ்ப் பல்கலைக் கழகம் அரண்மனை வளாகம் தஞ்சாவூர்
பதிப்பாளர் பெயர்	: இயக்குநர், பதிப்புத்துறை
இந்தியக் குடிமகனா?	: ஆம்
முகவரி	: தமிழ்ப் பல்கலைக் கழகம் அரண்மனை வளாகம் தஞ்சாவூர்
ஆசிரியர் பெயர்	: இயக்குநர், பதிப்புத்துறை
இந்தியக் குடிமகனா?	: ஆம்
முகவரி	: தமிழ்ப் பல்கலைக் கழகம் அரண்மனை வளாகம் தஞ்சாவூர்
செய்தி இதழின் உரிமையாளர் பெயர் - பங்காளர் பெயர் - முகவரி	: இயக்குநர், பதிப்புத்துறை தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சாவூர்

மேலே குறிப்பிடப்பட்ட விவரங்கள் யாவும் என் அறிவுக் கெட்டியவரை உண்மை என்று உறுதி கூறுகிறேன்.

(ஒ-ம்)

நாள்: பதிப்புத்துறை இயக்குநர் (பொறுப்பு)

பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத்துறை.

அச்சு: தமிழ்ப் பல்கலைக் கழக அச்சகம், தஞ்சாவூர் - 613 001.